# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை 26.11.2024 கதிர் 429







# மேதகுவின் 70ஆவது பிறந்தநாள்

## அவரது இல்லத்தில் - மக்கள் வெள்ளத்தில்

### உணர்வுபூர்வமாக நிகழந்தேறியது




தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று செவ்வாய்க கிழமை வல்வெட்டித்துறையில் உள்ள அவருடைய இல்லத்தினல் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவிஜிலிங்கம் மற்றும் ஊர் மக்கள் ஒன்று திரண்டு கேக் வெட்டியும், இனிப்பு மற்றும் மரக் கன்டுகள் வழங்கியும் எழுச்சியான முறையில் இப் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வினை நடத்தினர்.

பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப படத்தினை கொண்ட பதாகை ஒன்றும் அச்சிடப்பட்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் போது அங்கு வந்திருந்த வல்வெட்டித் துறை பொலிஸார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடைய புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு

2 ➤

## சீரற்ற காலநிலை காரணமாக க.பொ.த உ/த பரீட்சைகள் ஒத்திவைப்பு

நாளை(27), நாளை மறுதினம்(28) மற்றும் வெள்ளிக்கிழமை (29) ஆகிய தினங்களில் நடைபெறவிருந்த க.பொ.த உ/த பரீட்சைகள் அனைத்தும் சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## திருகோணமலை மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு 1789 ஆக உயர்வு


(ஹஸ்பர் ஏ.எச்)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இன்று மதியம்வரை 623 குடும்பங்களை சேர்ந்த 1789 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பிரதி பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

இதில் சேருநுவர பிரதேச செயலக பகுதியில் 26 குடும்பங்களை சேர்ந்த 69 நபர்களும், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த 440 குடும்பங்களை சேர்ந்த 1152 நபர்களும், தம்பலகாமம் பிரிவில் சேர்ந்த 08 குடும்பங்களை சேர்ந்த 40 நபர்களும், வெருகல் பிரசேச செயலக பிரிவை சேர்ந்த 01 குடும்பத்தை சேர்ந்த 2 நபர்களும், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பகுதியை சேர்ந்த 148 குடும்பங்களை சேர்ந்த 526 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 177 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளிலும் 19 குடும்பங்கள் இடைத் தங்கள் முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

## இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படலாம்!

### மக்கள் எச்சரிக்கையாக இருக்கவும்



இரணைமடு குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதனால், மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக வான் கதவுகள் இன்று திறக்கப்படலாம். எனவே, இரணைமடுக் குளத்தின் கீழ்ப்பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாவட்ட அரசாங்கதிபர் எஸ் -முரளீதரன் தெரிவிப்பு மாவட்டத்தின் அனர்த்த நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சீரற்ற காலநிலை காரணமாக 721 குடும்பங்களைச்சேர்ந்த 2476 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார். இதனைவிட சிறிய குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ளதாகவும் உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் அர்த்த நிலைமையை எதிர்கொண்டால் 0212285330, 0760994885 கொண்டு தமக்கான உதவியினைப்பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

**மேதகுவின்..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)







சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் அந்த புகைப்படத்தினை நீக்கிவிட்டு உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்விவுகளை நடத்துங்கள் என்று பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அக்கோரிக்கையினை ஏற்ற மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் படத்தினை அகற்றிவிட்டு சிறப்பான முறையில் அவரின் பிறந்த நாள் நிகழ்வினை நடத்தினர்.

மேலும் இந் நிகழ்வின் சிறப்பம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினத்தை பிரதிபலிக்கும் வகையில் அவருடைய வீடு வளாகத்திற்குள் சிறுவர்கள் மற்றும் பொது மக்களால் 70 மரங்கள் நாட்டப்பட்டன.

இதுமட்டுமல்லாமல் 70 மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள், 70 தென்னை மரக் கன்றுகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப பிடத்தக்கது.

## கொழும்பில் இருந்து யாழ் சென்ற பேருந்து விபத்து

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற தனியார் பேருந்து ஒன்று இன்று அதிகாலை விபத்துக்குள்ளாகி உள்ளது. புனேவ பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தமையால் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமா வீதியில் வழுக்கும் நிலைமை காணப்பட்டதால் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து சம்பவம் தொடர்பில் புனேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# கொட்டித்தீர்க்கும் மழையால் மாணவர்கள் தவிப்பு



மாரிகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் வடமாகாணத்தில் ஒரு வாரமாக பெய்து வரும் அடைமழை நேற்று காலை முதல் மழை மேலும் அதிகரித்தது. இந்நிலையில் நேற்றையதினம் கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு ஆரம்பமான நிலையில் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனையடுத்து மாணவர்களின் பரீட்சை நிலையங்களுக்கு உரிய நேரத்தில் அழைத்து செல்லும் நடவடிக்கையை இராணுவ அதிகாரிகள் மற்றும் வடக்கு பகுதி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

வீதிகள் அழிந்தும், பாலங்கள் உடைந்தும் கிடப்பதால் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்ட கடினமான சூழலில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் உடைந்து வெளியேறும் நீர் , பாலத்தின் மீது பாய ஆரம்பித்ததால் முல்லைத்தீவுக்கான பாதை மூடப்பட்டுள்ளது. வாகன போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாகாணங்களில் உள்ள நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதால் பாதைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் ., கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான தொடர்பு முறிந்துவிட்டது.

வவுனியாவில் உள்ள பேராறு நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதன் இரண்டு பிரதான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பல வீடுகளில் வெள்ளம் புகுந்ததனால், அக்கிராமங்களில் வசிப்பவர்களுக்கு தேவையான பொருள்கள் வாங்க முடியாமல் உள்ளது. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாகாணங்களில் சுமார் பத்தாயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இராணுவம், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், பொலிஸ், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதேசமயம் பெருமழையினால் விவசாய நிலங்களும், மாடு, ஆடு, கோழி என ஏராளமான பண்ணை விலங்குகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

# மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனுக்கு நோட்டீஸ்

*இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை பெப்ரவரி 25ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்ப கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*2015ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தினால் அரசாங்கத்திற்கு பத்து பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டில் அவர் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ளார்.*

*இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.*








## அநுரவுக்கு சீனாவிடமிருந்து அழைப்பு

சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதெவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் ஜனாதிபதி இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதி அனுர இந்திய செல்லும் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். இந்த நிலையில் இலங்கையில் உள்ள சீன தூதரகத்தில் இருந்து அவருக்கு சீனாவுக்கு வருமாறு அழைப்பு வந்துள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# மழை வாழ்க்கை

மழை பயிர்க்குலம் தழைக்கவும், அதனால் மனித குலம் தழைக்கவும் உதவும் உன்னத அமிழ்தம் ஆகும். அமுதம் என்பது உயிர் வளர்க்க கூடிய ஒன்று. மழையும் உயிர்களை காக்கும் ஒன்று. அதனால் தான் மழையை அமிழ்தம் என திருவள்ளுவர் குறிப்பிட்டார்.

'வானின் றுலகம் வழங்கி வருவதால்தானமிழ்தம் என்றுணரர் பாற்று'என்கிறது திருக்குறள்.

மழையை, அமிழ்தம் என்று அவர் சொல்ல இன்னொரு காரணமும் உண்டு. உண்பதற்கு ஆன உணவுப் பொருட்கள் விளைய, மழை காரணமாகிறது.

'துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூவும் மழை'

என்ற திருக்குறள், மழையின்

பெருமையை பறை சாற்றுகிறது. வான் சிறப்பு என திருவள்ளுவர் இந்த அதிகாரத்திற்கு பெயரிட்டிருக்கிறார். மனித குலம்

சிறப்பாக இருக்க வேண்டும் என்றால், வான் மழை சிறப்பாக இருக்க வேண்டும்.

'மாமழை போற்றதும்
மாமழை போற்றதும்
நாம நீர் உலகிற் கவனளி போல்
மேல் நின்று தான் சுரத்தலான்'

என சிலப்பதிகாரத்தில் இளங் கோவடிகள் மழையின் சிறப்பை உணர்த்தியிருப்பார். சோழனின் கொடை தன்மை போல், மழை வானின்றும் சுரக்கிறது என்று மன்னனையும், மழையையும் போற்றுவார். இரண்டு பேருமே மக்களையும்,

மண்ணையும் காப்பவர்கள் என்று இதன்உள்ளீடாக உணர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படி பொழியும் மழை நீரை வாய்க்காலாய், மதகுகளாய், குளங்களாய், ஊருணிகளாய் நம் முன்னோர்கள் தேக்கி வைத்தனர்.

மழையும், மன்னர்களும்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று திருத்

தல சிறப்பை சொல்லும் போது, தீர்த்தம் என்பது நீரின் குறியீடாக தெப்பக்குள சிறப்பாக எடுத்து காட்டப்படுகிறது. ஊரைச் சுற்றி குளங்கள், கண்மாய்கள் இருக்கும் போது, அங்கே நிலத்தடி நீர் பெருகுகிறது. ஊற்று வற்றாமல் சுரக்கிறது. கோடையில் தண்ணீர் பஞ்சம் தடுக்கப்படுகிறது. இவை எல்லாம் நீரின் அருமையை உணர்ந்த நம் முன்னோர்கள் நெறிமுறைகளில் ஒன்று.

நம் மன்னர்களில் பெரும்பாலானோர்

நீர் காக்கும் பணியை செவ்வனே செய்திருக்கிறார்கள். நீர் காக்கும் பெருமுயற்சியின் பிதா மகனாக மாமன்னர் கரிகாற் பெருவளத்தான் திகழ்ந்திருக்கிறான். அவன்

கட்டிய கல்லணை கம்பீரத்தின் காட்சியாக நீர் தேக்கும் சாட்சியாக இன்று விளங்குகிறது.

கரிகாலனை தொடர்ந்து பிற்காலச் சோழர்களில் ராஜ ராஜ சோழனும்,

ராஜேந்திர சோழனும் அமைத்த நீர்தேக்கங்கள் இன்றளவும் வரலாற்றின் அழியாத பக்கங்களாக ஆராதிக்கப்படுகிறது.

நீர்சக்தி

வீர நாராயணன் ஏரி என்ற வீராணம் ஏரி, பொன்னேரி, சோழகங்க ஏரி, மதுராந்தகம் ஏரி என இதை விரித்து கொண்டே போகலாம். ஒரு நாட்டின் வளமையை நிர்ணயிப்பது அந்த நாட்டிலுள்ள நீர்சக்தி என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். நீர்ச்சத்து குறைந்தால், ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும்.

நீர்ச்சத்து குறைந்தால் பஞ்சம், பசி,

பட்டினி, வறுமை, பிணி, வழிப்பறி, தேச துரோகம் என எல்லாம் தலை விரித்தாடும். அது ஒரு தேசத்தை பிடித்த நோயாகும் என்பது அவர்களின் கணிப்பு. நீர் காக்கும் முயற்சியிலும், நீர்த்தேக்கும் முயற்சியிலும் எல்லா மன்னர்களும் ஈடுபட்டிருந்தனர்.

மன்னர் அமைத்த குளம்

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர், நகரை சுற்றி அமைத்த குளங்களும், ஏரிகளும், தெப்பக்குளங்களும், அதற்கு திலகம் வைத்தது போல மதுரையின் கிழக்கே உலகம் போற்றும் மாரியம்மன் தெப்பக்குளத்தை அவர் அமைத்த பாங்கும், வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

அவர் காலத்தில் நிகழ்ந்ததாக குறிப்பிடப்படும் செவி வழிச் செய்தி உலவுகிறது. தன் தங்கையை புல்வாய்க கரை அருகிலுள்ள திம்மாபுரம் என்ற சிற்றூரில் திருமணம் முடித்து தந்ததாகவும், மழை இல்லா ஒரு



வறண்ட நாளில் பயிர் எல்லாம் தண்ணீருக்காக தவம் கிடந்த நாளில் தன் தங்கையை பார்க்க ஆனை, சேனை பரிவாரத்துடன் வந்ததாகவும், அவர் வருகையை அந்த ஊர் மக்கள் அவரின் தங்கையான திம்மியிடம் கூறிய போது, அவர் கோபத்துடன் தண்ணீர் பஞ்சத்தில் கருகி கிடக்கும் நம் வயல்களுக்கு தண்ணீர் கொண்டா வருகிறார் என்ற ரீதியில், கார் கொண்ட நெல்லுக்கு நீர் கொண்டா வருகிறார், கதிர் கொண்ட நெல்லுக்கு தண்ணீர் கொண்டா வருகிறார் என கேட்டதாகவும், அந்த தகவல் மன்னரின் காதுகளை எட்ட அவர் உடனே மதுரை திரும்பி, கிருதுமால் கால்வாயில் இருந்து ஒரு துணை கால்வாய் வெட்டி கொந்தகை, கட்டமன்கோட்டை, விராதனூர், நெடுங்குளம், முக்குடி, சாரி புதுக்கோட்டை, கொட்டங்குளம், முடிச்சனேந்தல், கீழக்கள்ளங்குளம், திம்மாபுரம் என்ற ஊர்களின் வழியாக நீர்தடங்கள் அமைத்து அந்த ஊர் கண்மாய்க்கு நீர் கொண்டு சேர்த்ததாகவும் 400 ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிறது.

இப்பகுதி ஊர்க்காடுகள் வழியாக மங்கம்மாள் சாலை, மதுரையிலிருந்து நரிக்குடிக்கு இந்த ஊர்கள் வழியாக தான் போகிறது. அதற்கு மங்கம்மா சாலை என்றே பெயரிடப்பட்டு இன்றளவும் அழைக்கப்படுகிறது.

வேளாண்மை சார்பு

காலனி ஆட்சியின் தொடக்கம் வரை நமது பொருளாதாரமும், பண்பாடும் வேளாண்மை சார்ந்தவை. எனவே தண்ணீர் என்பது மதிப்பும், புனிதமும் சார்ந்தது. குளம் தொட்டு வளம் பெருக்குதல் என்பது தமிழகத்து அரசரின் தலையாய கடமையாக இருந்தது. இந்த கடமையை மதுரை நாயக்க அரசின் புகழ் பெற்ற மன்னரான திருமலை மன்னர் வரை, எல்லா மன்னர்களும் நிறைவேற்றியுள்ளனர்.

வைகை ஆற்றின் நீரை கொண்டே சோழவந்தான் தென்கரைக்கு அருகில் உள்ள கட்டிக்கள்ளூர் சேந்தனேரி என்ற குளம் கி.பி.9ம் நூற்றாண்டில் வெட்டப்பட்டது.

கி.பி., 17 ம் நூற்றாண்டில் ஆற்றின் கடைமடை பகுதியில் மிகை நீரை தேக்கி ரகுநாத சமுத்திரம் என்ற பெரிய கண்மாய் சேதுபதி மன்னரால் வெட்டப்பட்டது. சேதுபதி சீமையில் இப்படி சேதுபதி மன்னர்கள் அமைத்த குளங்கள், கண்மாய்கள், ஊருணிகள் இன்னும் அவர்கள் புகழினை பேசுகின்றன.

புகழ் பேசும் ஊருணி

சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டிய மன்னர்கள் அமைத்த ஊருணிகள் இன்றும் அவர்கள் புகழினை பேசுகின்றன. ஒரு ஊருணி அமைக்கும் போது விருத்திகள் என்ற பார்ப்பார்கள். சந்திர விருத்தி, சூரிய விருத்தி என்பது இது. இதில் சந்திர விருத்தியில் அமைத்தால்அமைத்தவரின் குலம்வாரிசின்றி போகும் என்று ஒரு சாஸ்திரம் உண்டு. சிவகங்கை பகுதியில் குடிநீர் பஞ்சம் போக்க ஒரு சமயம் மருதுபாண்டியர் மன்னர்கள் ஊருணி அமைக்க தச்சு செய்யும் போது, ஆசாரி தயங்கினார்.

சந்திர விருத்தியில் அமைப்பது உங்கள் குடிக்கு ஆகாது என ஆசாரி கூறிய போது, 'குடிகள் தான் எம் மக்கள் மக்கள் குடிக்கத்தான் நீர். எனவே குடிநீருக்கு பயன்படும் வகையில் சந்திர விருத்திகள் ஊருணி அமைக்க மருதுபாண்டியர் உத்தரவிட்டது, இன்றளவும் நினைவு கூறப்படுகிறது. அந்தளவிற்கு நீரின் பயனை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

தம் வம்ச விருத்தி பாதிக்குமே என பயப்படவில்லை. தமிழக மக்கள் வரலாறு என்பது அரசுகளின் வரலாறு மட்டுமின்றி, ஆறுகள், குளங்கள், நீர் வரத்து கால்வாய்கள் ஆகியவற்றின் வரலாறும் ஆகும் என தமிழறிஞர் தொ. பரமசிவன் கூறுகிறார்.

மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு என்பது கேலிக்குறியதல்ல. அது அவசியமானது. கிராமங்களில் அந்த கால வீடுகளில் முற்றம் வைத்து கட்டியிருப்பர். கடுமையான மழை பொழிவிலும் முற்றத்தில் விழும் மழை நீர், தேங்காமல் செல்ல தூம்பு வைத்திருப்பர். அதன் வழியாக மழை நீர் நிலத்திற்குள் செல்லும். இப்படி நம் முன்னோர்கள் மழை நீர் சேகரிப்பின் மூலம் மண்ணுக்கும், வீட்டிற்கும் பயன் சேர்த்துள்ளனர். அவர்களின் சந்ததியர்களாகிய நாம் மழை நீரின் அருமையையும், மழைநீர் சேகரிப்பின் நன்மையையும் அறியாமல் இருக்கிறோம்.

நீர் நமது உணவு
நீர் நமது உயர்வு
நீர் காத்தல் நம் வேட்கை
நீரோடு தான் நம் வாழ்க்கை

மழை நீர் சேகரிப்போம். நிலத்தடி நீர் தேக்குவோம். நம் தலைமுறைகளுக்கும் அதை விளக்குவோம்.

மழை எனும் அமிழ்தம் நம்
மண்ணுக்கு அவசியம்.

# முல்லைத்தீவில் அடைமழை







முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பில் கடந்த மூன்று நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது.

இதனால் வர்த்தகர்கள், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட முடியாமல் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடும் மழையினால் பல இடங்களில் வெள்ள நிலை காணப்படுவதனாலும், வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையினாலும் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள், வர்த்தகர்கள் முதலான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய பலத்த மழை காரணமாக அனர்த்த முகாமைத்துவபிரிவினர்வெள்ள அபாய சிவப்பு எச்சரிக்கையினை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மழையால் எலிக்காய்ச்சல் அதிகரிப்பு



நாட்டில் கடும் மழையால் எலிக்காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதன்படி, மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையிலும், ஒக்டோபர் மாதம் முதல் தற்போது வரையிலும் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மற்றும் தற்போது பெய்து வரும் கடும் மழையுடன் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்திலும் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 500 இற்கும் அதிகமான எலிக்காய்ச்சல் (டுநிவழளிசைழளளை) நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய தொற்றுநோய்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, 35 இறப்புகளும் பதிவாகியுள்ளன. இந்நிலையில் இது விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் தடுக்கப்படக்கூடிய நோயாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக தொற்றுநோயியல் துறை தெரிவித்துள்ளது.

# வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை



வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்காக உள்ள ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்ற நிலையில் நகரும் வேகம் மந்தமாக காணப்படுகின்றது என யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அம்பாறையிலிருந்து தென்கிழக்காக 238 கி.மீ. தொலைவில் அதன் மையம் காணப்படுகின்றது. இன்று காலை 8.00 மணியளவில் இலிருந்து 140 கி.மீ. தூரத்தில் காணப்படும். நாளை மாலை 3.00 மணியளவில் அம்பாறைக்கு மிக அண்மித்து அம்பாறையில் இருந்து 82 கி.மீ. தூரத்தில் அதன் மையம் காணப்படும்.

இந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் 27 ம் திகதி அதிகாலை 2.00 மணியளவில் மட்டக்களப்பு நகரில் இருந்து 91 கி.மீ. இல் காணப்படும்.

அதன் பின்னர் நண்பகல் 1.00 மணியளவில் திருகோணமலையில் இருந்து 94 கி.மீ. தூரத்தில் காணப்படும். பின்னர் 27ம் திகதி மாலை 6.00 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து கிழக்காக 109 கி.மீ. தூரத்தில் இந்த புயல் காணப்படும்.

தற்போதைய நகரும் வேகத்தில் தான் இந்த புயலின் இடவமைவு மேற்குறிப்பிட்ட இடங்களில் காணப்படும். நகரும் வேகம் மாற்றமடைந்தால் இடங்களும் மாறும் என்பதைக் கருத்தில் கொள்க. கரையைக் கடக்கும் இடம் இன்னமும் தெளிவாகவில்லை. தீர்மானமாக அறிந்ததும் தெரிவிக்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் நாளை முதல் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புண்டு. அம்பாறை மாவட்டத்தில் காற்றின் வேகம் அதிகரிக்கும்.

முன்னரே குறிப்பிட்டபடி இன்றும் நாளையும் (2024 நவம்பர் 26 மற்றும் 27) மிக முக்கியமான நாட்களாகும். இடி மின்னல் நிகழ்வுகளும் இடம்பெறும் என்பதனால் இடி மின்னல் தொடர்பிலும் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

எனவே பொதுமக்களை மிக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.



# அணுகுண்டு வீசப்பட்டால் என்ன செய்யவேண்டும்?

## அமெரிக்கா தனது குடிமக்களுக்கு வழங்கியுள்ள ஆலோசனை




ரஷ்ய உக்ரைன் போரில், அமெரிக்கா, பிரித்தானியா முதலான நாடுகள் ரஷ்யாவைத் தாக்க உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கியுள்ள விடயத்தால் மூன்றாம் உலகப்போர் வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

போரில் அணு ஆயுதங்கள் பிரயோகிக்கப்படலாம் என்னும் அச்சம் உருவாகியுள்ளதால், பல நாடுகள் தத்தம் குடிமக்களுக்கு அது தொடர்பில் ஆலோசனை வழங்கிவருகின்றன.

இந்நிலையில், அமெரிக்க பெடரல் அவசரகால மேலாண்மை ஏஜன்சி(குநனநசயட நுஅநசபநஉல ஆயயெபநஅநவெ யுபநஉல), அணுகுண்டு வீசப்பட்டால் மக்கள் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

அணு ஆயுதங்கள் வெடிப்பதால், அந்த வெடிப்பு, வெப்பம் மற்றும் அணுக்கதிர்வீச்சால் குறிப்பிடத்தக்க அளவில் சேதம் ஏற்படும் என்றும், ஆனாலும், அதிலிருந்து உங்கள் குடும்பத்தினரை பாதுகாக்கமுடியும் என்றும் FEMA ஏஜன்சி தெரிவித்துள்ளது.

அணுகுண்டு வீசப்பட்டால், வீடுகளுக்குள்ளேயே இருங்கள், ஜன்னல்களை விட்டு தூரமாக, அறையின் நடுப்பகுதியில், முடிந்தால் வீட்டின் அடித்தளத்தில் இருங்கள்.

அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும்வரை, குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம்.

அருகிலுள்ள குடும்ப உறுப்பினர்களை சந்திக்க புறப்பட்டால், அணுக்கதிர் வீச்சின் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும்.

ஒருவேளை துரதிர்ஷ்டவசமாக நீங்கள் அணுகுண்டு வெடிக்கும் நேரத்தில் வீட்டுக்கு வெளியே மாட்டிக்கொள்ள நேர்ந்தால், அருகிலுள்ள பாதுகாப்பான இடம் ஒன்றிற்குச் சென்று முகம் குப்புற தரையில் படுத்துக்கொள்ளுங்கள்.

ஒருவேளை நீங்கள் காருக்குள் இருந்தால், பொதுவாக அது பாதுகாப்பானதல்ல, என்றாலும், காரின் டேஷ்போர்டுக்குக் கீழே சுருண்டு பதுங்கிக்கொள்ளுங்கள்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# வரவு செலவுத் திட்டம் குறித்த அறிவிப்பு



2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு 2025 பெப்ரவரி 17ஆம் திகதியும், மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# படகு கவிழ்ந்து தந்தையும் மகளும் சடலமாக மீட்பு



நீர்கொழும்பு, முன்னக்கரை களப்பு பகுதியில் படகு விபத்தில் காணாமல் போன தந்தை மற்றும் மகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ள சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னக்கரை சிறிவர்தன்புர குளத்தில் நேற்று பிற்பகல் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபகுதியை சேர்ந்த 50 வயதுடைய ரணில் பெர்னாண்டோ எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையும் அவரது 18 வயதான மூத்த மகள் நிலுஷா நெத்மி பெர்னாண்டோ என்ற யுவதியுமே கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த கத்தோலிக்க மதகுருவுடன் சிறிய மீன்பிடி படகில் 7 குடும்ப உறுப்பினர்கள் பயணித்துள்ளனர்.

இதன்போது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் காப்பாற்றப்பட்ட நிலையில் இருவர் காணாமல் போயிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் தந்தை மற்றும் மகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2024 இல் வெளியிடப்பெற்றது.